### தமிழ்நாட்டின் நலனை – மாநிலப் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்காதபடி தொகுதி மறுசீரமைப்பு தேவை!

# காவிரிப் பிரச்சினையில் நம் உணர்வை வெளிப்படுத்துவதை விடுத்து த.வெ.க. அரசு 'டேக் டைவர்சன்' அரசியல் செய்ய வேண்டாம்!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவுறுத்தல்!

**சென்னை, ஆக. 9 -**

**"தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் 'Fair Delimitation' வேண்டும் என்பதில் தி.மு.க. உறுதியாக இருக்கிறது" "காவிரிப் பிரச்சினையில் ஒற்றுமையாக இருந்து தமிழ்நாட்டின் உணர்வை வெளிப்படுத்த வேண்டிய நேரத்தில், த.வெ.க. அரசு 'டேக் டைவர்சன்' அரசியலை மேற்கொள்ள வேண்டாம்" என கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் நலனையும், நம் மாநிலத்திற்குரிய பிரதிநிதித்துவத்தையும் பாதிக்காத வகையில் 'Fair Delimitation' மேற்கொள்ள வேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுதியான நிலைப்பாடு.

**தி.மு.க. நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை!**

கடந்த ஆண்டு மார்ச் மாதம் தமிழ்நாடு அரசின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட நிலைப்பாட்டில் தி.மு.க. இப்போதும் உறுதியாக இருக்கிறது. எங்களுடைய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும், தடுமாற்றமும் இல்லை.



நடைபெற்று வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் அலுவல் அட்டவணையில் தொகுதி மறுசீரமைப்பு மசோதா அறிமுகப்படுத்துவது தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படாத நிலையில், தொகுதி மறுசீரமைப்பு மசோதா தொடர்பாக என்ன செய்ய வேண்டும் என்று தி.மு.க.வுக்கு அறிவுரை சொல்லும் தகுதி எந்தக் கட்சிக்கும் இல்லை. முறையற்ற தொகுதி மறுசீரமைப்பால் இந்திய அளவில் ஏற்படவுள்ள ஆபத்தை முதன்முதலாக எடுத்துரைத்து, அதற்கெதிரான வலுவான கருத்தை உருவாக்கி, ஒருமித்த குரல்களை ஒன்றிணைத்ததே தி.மு.க.வும் எங்கள் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும்தான் என்பதை நாடறியும்.

**தொகுதி மறுசீரமைப்பு மசோதாவை தேசிய அளவில் பேச வைத்தோம்!**

சென்னையில் இதற்கான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தைக் கூட்டி, பாதிப்புக்குள்ளாகும் அனைத்து மாநிலங்களையும் ஓரணியில் திரட்டி, இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்து, இந்த விவகாரம் குறித்து தேசிய அளவில் விவாதிக்க வைத்தோம்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலுக்கான பரப்புரை உச்சக்கட்டத்தில் இருந்தபோதே, "தேர்தல் கூட எங்களுக்குப் பிறகுதான்; தமிழ்நாட்டின் உரிமையைப் பறிக்கும் வகையில் அமைந்திருக்கும் தொகுதி மறுசீரமைப்பு மசோதாவை எதிர்ப்பதுதான் எங்களது முதல் பணி" எனப் பிரகடனம் செய்து, தமிழ்நாட்டில் உள்ள இல்லங்களின் முன் கருப்புக் கொடியேற்ற அழைப்பு விடுத்து, அந்தச் சட்டமுன்வரைவின் நகலை எரித்து எதிர்ப்புக் காட்டியவர்தான் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

எனவே, இவற்றின் அடிப்படையில், தற்போதைய அரசு ஆகஸ்ட் 8 அன்று அழைப்பு விடுத்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்தாய்வுக் கூட்டத்திலும் தி.மு.க. உறுப்பினர்கள் கலந்துகொண்டு, எங்களது கருத்தைத் தெரிவிப்பதில் எங்களுக்குத் தயக்கம் இல்லை.

**அனைத்துக் கட்சித் கூட்டத்தைக் கூட்ட த.வெ.க. அரசுக்கு என்ன பயம்?!**

ஆனால், அதற்கு முன்பாக, கர்நாடக அரசு மேகதாது அணை கட்ட முனைப்புக் காட்டும் விவகாரம் குறித்து விவாதிக்கவும், தமிழ்நாட்டிலுள்ள கட்சிகளின் ஒற்றுமையை வெளிப்படுத்தவும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்ற நிபந்தனையைத் தமிழ்நாடு அரசிடம் திராவிட முன்னேற்றக் கழகம் முன்வைக்கிறது.

**தமிழ்நாட்டை பாதிக்கவிடாமல் தடுக்க தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. இருக்கும்!**

புதுக் கூட்டாளியான காங்கிரசின் மனம் புண்படும் என்பதால் மேகதாது விவகாரத்தில் கள்ள மவுனம் காத்துக்கொண்டு, ஏற்கனவே முடிவெடுக்கப்பட்ட தொகுதி மறுசீரமைப்பு மசோதா தொடர்பாக மட்டும் கூட்டம் கூட்டுவதை ஏற்க முடியாது!

தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக தமிழ்நாட்டுக்கான பிரதிநிதித்துவ உரிமை பாதிக்கப்படக் கூடாது; பாதிக்கப்பட்டால் அதைத் தடுக்கும் முன்னணிப் படையாகக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. இருக்கும். அதேநேரத்தில், இன்றைய சூழலில் காவிரி உரிமையை மீட்பதும், மேகதாது அணையைத் தடுப்பதும் மிக மிக முக்கியமானவை. தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உணர்வை வெளிப்படுத்த வேண்டிய அவசிய அவசரம் இப்போது எழுந்துள்ளது. இந்த நேரத்தில் த.வெ.க. அரசு 'டேக் டைவர்ஷன்' அரசியலை மேற்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### எதிர்க்கட்சித் தலைவர் பேசாததைப் பேசியதாக செய்தி வெளியிட்ட

# 'இந்தியா டுடே' மற்றும் 'என்.டி.டி.வி.' தொலைக்காட்சிகள் மீது அவதூறு வழக்கு!

# ரூ.100 கோடி நஷ்டஈடு கேட்டு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தொடர்ந்தார்!

## நஷ்டஈடு தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படும்!

**சென்னை, ஆக.9–**

**எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசாததைப் பேசியதாக திரித்து செய்தி வெளியிட்ட 'இந்தியா டுடே' தொலைக்காட்சி மற்றும் அதன் செய்தித் தொகுப்பாளர் அக்ஷிதா நந்தகோபால் & 'NDTV 24x7' தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் அதன் செய்தித் தொகுப்பாளர் சிவ அரூர் ஆகியோர் மீது 100 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சார்பில் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் அவதூறு பரப்பியதற்காக பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், 100 கோடி ரூபாய் நஷ்ட ஈடு தொகை விவசாயி களுக்கு வழங்கப்படும் என்றும் அந்த நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டின் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதைத் திரித்து அவதூறாக செய்திகளைப் பரப்பியதற்காக 'இந்தியா டுடே' (India Today TV) தொலைக்காட்சி நிறுவனம் & அதன் மூத்த செய்தி தொகுப்பாளர் அக்ஷிதா நந்தகோபால் மற்றும் 'NDTV 24x7' தொலைக்காட்சி நிறுவனம் & அதன் செய்தித் தொகுப்பாளர் சிவ அரூர் ஆகியோரிடம் 100 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சார்பில் 06 ஆகஸ்ட் 2026 அன்று வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.



கடந்த ஆகஸ்ட் 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் 'இந்தியா டுடே' தொலைக்காட்சியிலும், அதன் யூடியூப் பக்கத்திலும் ஒளிபரப்பப்பட்ட விவாத நிகழ்ச்சிகளில், தஞ்சாவூரில் நடைபெற்ற விவசாயிகளுக்கு ஆதரவான போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையைத் திரித்து, தவறான மற்றும் அவதூறான கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளது.

அவர் தனது உரையில் எந்தவொரு தனிநபரையோ, நடிகை திரிஷாவையோ சுட்டிக்காட்டிப் பேசவில்லை அப்படி இருக்கும்போது பெண்களை இழிவுபடுத்தும் வகையில் பேசியதாக செய்தித் தொகுப்பாளர் அக்ஷிதா நந்தகோபால் தவறான அர்த்தம் கற்பித்துள்ளார்.

அதேபோல என்.டி.டி.வி. செய்தித் தொகுப்பாளர் சிவ அரூர், விவசாயிகளுக்கு ஆதரவான போராட்டக் கூட்டத்தில் சிலர் எழுப்பிய கோஷங்களை உதயநிதி ஸ்டாலினின் அவர்களின் கருத்தாகச் ஜோடித்து, அதை இரட்டை அர்த்த ஆபாசப் பேச்சாக தவறாகச் சித்தரித்துள்ளார். சிவ அரூர் அவர்கள் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக தனது சமூக வலைதளப் பக்கங்களில் (X/Twitter) திமுக, திமுக தலைவர்கள் மற்றும் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் குடும்பத்தினருக்கு எதிராக அருவருப்பான சொற்களைப் பயன்படுத்தித் தொடர்ச்சியாகத் தனிப்பட்ட பகை உணர்வை வெளிப்படுத்தி வந்துள்ளது ஆதாரங்களுடன் நோட்டீஸில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எந்த இடத்திலும் நடிகை திரிஷாவின் பெயரையோ, முதலமைச்சரின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியோ பேசாத நிலையில், NDTV விவாத நிகழ்ச்சியில் அவர்களது புகைப்படங்களை ஒளிபரப்பி, அவதூறான கருத்துக்களை உதயநிதி ஸ்டாலின் மீது சுமத்தியுள்ளது திட்டமிட்ட சதிச் செயல் என அந்த நோட்டீஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த சட்டப்பூர்வ நோட்டீஸ் கிடைத்த 48 மணி நேரத்திற்குள் இந்தியா டுடே தொலைக்காட்சி மற்றும் 'NDTV 24x7' தொலைக்காட்சி அவர்களின் அதிகாரப்பூர்வ சமூக வலைதளப் பக்கங்களில் நிபந்தனையற்ற பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். அவதூறு பரப்பும் வகையில் யூடியூப் மற்றும் சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்ட வீடியோக்களை உடனடியாக நீக்க வேண்டும். எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தியதற்காக ரூ.100 கோடி நஷ்ட ஈடு வழங்க வேண்டும். அந்த தொகையானது காவிரி குறுவை சாகுபடியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையாக வழங்கப்படும் என அந்த வழக்கறிஞர் நோட்டீஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிட்ட கெடுவுக்குள் மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறினால், இந்தியா டுடே நிறுவனம் மற்றும் செய்தித் தொகுப்பாளர் மீதும் , 'NDTV 24x7' நிறுவனம் மற்றும் அதன் செய்தித் தொகுப்பாளர் மீதும் கிரிமினல் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

---

### புதுக்கோட்டையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் மரியாதை!

*புதுக்கோட்டை, ஆக.9-*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு, புதுக்கோட்டையில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.*

*முன்னதாக கீழ ராஜ வீதியிலுள்ள அண்ணா சிலையிலிருந்து அமைதி பேரணியாக புறப்பட்டு மாவட்ட கழக அலுவலகம் வந்தடைந்தனர்.*

*நிகழ்வில் மாநில மாவட்ட நிர்வாகிகள் அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், அரு.வீரமணி, சுப. சரவணன், சு. சண்முகம், கே.ஆர்.என். போஸ், செ.அசோக் பாண்டியன், மேயர் திலகவதி செந்தில், க.மதியழகன், பி. ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, மாநகர கழக பொறுப்பாளர்கள் துணை மேயர் எம், லியாகத் அலி, வே. ராஜேஷ், ஒன்றியச் செயலாளர்கள் என். சேட்டு, தென்னலூர் எம். பழனியப்பன்,*

*தவ.பாஞ்சாலன், மு.க. ராமகிருஷ்ணன். ஓ.எஸ். வெங்கடாச்சலம், ஆர்.ஆர். சாமிநாதன். சி.சண்முகம், அ.இளங்குமரன்,' எம். கோவிந்தராஜன், பி.அண்ணாத்துரை, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, செல்லத்துரை, மற்றும் அ.ரெத்தினம், எம்.எம். பாலு, செந்தாமரை பாலு, எம்.வேலுச்சாமி, வி.ஜி.ஆர். மணிவண்ணன், சி.அரங்கநாயகம், அ.பிரபா, டி.எம். ஆர்.ராமமூர்த்தி, ஜெ.அஸ்ரப் அலி, ஆ.ராஜேந்திர சோழன், வெற்றிச்செல்வன், மா.மணிவேலன், ப.ரெங்க ராஜ், பழனிவேலு, சேட்(எ) ஷாஜகான், இராம.செல்வராஜ், டி. அப்புக்காளை, வடவாளம் க. செ.மணிமாறன், கே.எம். கே.ரவிக்குமார், எம்.ஏ.எம். இம்தியாஸ், வீரய்யா, தமிழினியன், பி.கே.வெங்கடேஷ், வை. நடராஜன், ஏ.எஸ்.கருணாநிதி, டி.செல்வம், செ.ரமேஷ், கே.ஆர். பாலமுத்து, தட்டாம்பட்டி ஆறுமுகம், சதீஷ், தமிழியன், தங்கமணி, ஓ.ஆறுமுகம், ஏ.எல்.கணேசன், முரளிதரன், எழில்ராஜா, ஆதீஸ்வரன், பால்ராஜ், சந்தர்தர்ராஜ், தேன்கனிப்பட்டி ராஜா, அற்புத ஹென்றி, ராமச்சந்திரன், ஆர்.எம்.சத்யா, கண்மணி சுப்பு, முத்துக்கருப்பன், ஆர்.கே.இளங்கோ, அறிவு, கே.எம்.எஸ்.குமார் மாநில மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.*

---

### திருவாரூர் மாவட்டம்

# நீடாமங்கலத்தில் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவுநாள்!

## திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து - கழகத்தினர் வீரவணக்கம்!

திருவாரூர்,ஆக. 9-

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வடக்கு ஒன்றியம் மற்றும் பேரூர் தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. நீடாமங்கலம் அண்ணா சிலையில் இருந்து ஊர்வலமாக சென்று கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி அனைவரும் வீரவணக்கம் செலுத்தினார்கள்.

முன்னதாக அண்ணா சிலை அருகில் இருந்து சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் பி.இராசமாணிக்கம் அவர்கள் தலைமையிலும் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் சோம.செந்தமிழ்ச் செல்வன், ஒன்றிய செயலாளர் கே.வி.கே.ஆனந்த், ஒன்றிய முன்னாள் செயலாளர் விசு. அண்ணா துரை,

வடக்கு ஒன்றிய முன்னாள் பொறுப்பாளர் சி.கோபால கிருஷ்ணன், பேரூராட்சி தலைவர் ஆர் ஆர்.ராமராஜ், பொதுக்குழு உறுப்பினர் பி.கமாலுதீன், மாவட்ட மகளிர் அணி தலைவர் ராணி சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பி.ஜி.ஆர்.ராஜாராம், நகர இளைஞரணி அமைப்பாளர் காந்தி மணி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் திராவிடன் துணை அமைப்பாளர் கௌதம் ரவி,மாவட்ட பிரதிநிதிகள் நடேச மணி,குமார், ரவிச்சந்திரன், நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள் ஆய்குடி வேலு, கருணாகரன், மூர்த்தி, மல்லிகா கேசவன்,

ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் சுமதி குணசேகரன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை ஒன்றிய அமைப்பாளர் க.பிரகாஷ், மற்றும் பேரூர் கழக, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணியினர், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் இந்நாள் பிரதிநிதிகள், முன்னோடிகள் பங்கேற்றனர்.

---



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு மற்றும் பரமத்தி வேலூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர்கள் ஆர்.நடேசன், தா.கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர்கள் வட்டூர் தங்கவேல், தாமரைச்செல்வன், அருண் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் சுரேஷ்பாபு, நகர்மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு, நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் நினைவு நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் புதுக்கோட்டை தெற்கு மாநகர தி.மு.க. சார்பில் மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ் ஏற்பாட்டில் மாவட்ட கழக அலுவலகம் அருகில் பொதுமக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர் க.மதியழகன், மாநகர அவைத்தலைவர் அ.ரெத்தினம், மாநகர துணைச் செயலாளர் ப.ரெங்கராஜன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வடவாளம் மணிமாறன், கவுன்சிலர் சி.மதியழகன், செல்லையா, வெற்றிச்செல்வன், வட்ட கழக செயலாளர்கள் மதியழகன், கண்மணி சுப்பு, இராமலிங்கம், ஆர்.எம்..சத்யா, ராகவன் ஆதிமூலம், அண்ணாதுரை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.